A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 08 / 2024</u>**

திருமதி G.S.S. லதா,
18–84/2, பரவை, லூத்தரன்சபை திருசபை அருகில்,
இனையம்புத்தன்துறை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்–629193

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு D.S. பிரைட் சிங்)

எதிர்

செயற்பொறியாளர்/ விநியோகம் / குழித்துறை,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், மருதன்கோடு, மீனச்செல்,
குழித்துறை – 629 153.

. . . எதிர்மனுதாரர்
(திருமதி T.K. உஷா, செயற்பொறியாளர்/ விநியோகம் / குழித்துறை)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 09–02–2024</u>**

**<u>கேட்புரை நாள்: 21–03–2024</u>**

**<u>ஆணை நாள்: 27–03–2024</u>**

**09.02.2024** அன்று பெறப்பட்ட திருமதி G.S.S. லதா, 18–84/2, பரவை, லூத்தரன்சபை திருசபை அருகில், இனையம்புத்தன்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்–629 193 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 08/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 21.03.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது சொத்தின் வழியாக செல்லும் மற்றொரு பயனீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கும் சர்வீஸ் வயரை அகற்றித் தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது வீட்டின் வடபுறத்தில் அமைந்துள்ள வீட்டின் மின் இணைப்புகுரிய சர்வீஸ் வயர் தனது சொத்தின் மீது செல்வதாகவும், தனது அனுமதியின்றி செல்லும் சர்வீஸ் வயரை அகற்றுமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் கோரிக்கை தொடர்பாக கள ஆய்வு செய்த போது, 10 அடி தூரத்தில் மேல்முறையீட்டாளரின் சொத்தின் வழியாக சர்வீஸ் வயர் செல்வதாகவும், சர்வீஸ் வயர் செல்லும் பாதையை மாற்ற விரும்பினால், மாற்று பாதையை தெரிவித்து பங்களிப்பு திட்ட முறையில் விண்ணப்பம் அளித்து, அதற்குண்டான மதிப்பீட்டு தொகையை செலுத்தும் பட்சத்தில், சர்வீஸ் வயர் செல்லும் பாதையை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தனது சொத்தின் வழியாக செல்லும் சர்வீஸ் வயரை அகற்றுமாறு மேல்முறையீட்டாளர் கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 26.08.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம் 16.09.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு :**

3.1 கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 16.09.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*
*மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மின்இணைப்பு சர்வீஸ் வயர் பாதை மாற்றப்பட வேண்டுமாயின் மனுதாரர் மாற்று பாதையை தெரிவித்து பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பித்து மதிப்பீட்டு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் மட்டுமே வாரிய விதிகளின்படி சர்வீஸ் வயரை மாற்றியமைக்க இயலும் என்பதால் இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 21.03.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு D.S. பிரைட் சிங் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திருமதி T.K. உஷா, செயற்பொறியாளர்/ விநியோகம் / குழித்துறை, கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் தான் ரயில்வே துறையிலிருந்து (இரயில் நிலைய கண்காணிப்பாளராக) ஓய்வு பெற்று கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் வட்டம், இனயம்புத்தன்துறை கிராமத்தில் பரவை பகுதியில் (லுத்தரன் திருச்சபை அருகில்) அமைந்துள்ள கதவு எண், 18-84/2 வீட்டினை கடந்த 07-02-2023-ல் தனது மனைவி

பெயரில் வாங்கி குடியிருந்து வந்ததாகவும், அவரது மின் இணைப்பு எண்.07-192-011-1746 எனவும் தெரிவித்துள்ளார்.

5.2 தங்கள் வீட்டின் வடபுறத்தில் அமைந்துள்ள வீட்டிற்கான (3 Phase) இணைப்பு தங்கள் தோட்டத்திற்குள் ஏறிச் செல்கிறது இவ்வாறு இணைப்பை பெறுவதற்கான வீட்டில் உள்ளவர்கள் தங்கள் இணைப்பு கம்பியில் (service wire) தங்கள் வீட்டு மரங்கள் தொடுவதாகக் கூறி தங்கள் வீட்டு மரங்களை வெட்டியுள்ளதாகவும், எனவே, அனுமதியின்றி தங்கள் சொத்தின் வழியே செல்லும் அந்த வீட்டின் மின் இணைப்பினை அகற்றித்தருமாறும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 திருமதி.G.S.S.லதா என்பவர் 26-08-2023 அன்று நுகர்வோர் குறைதீர் மன்றம் வாயிலாக மனு அளித்து அம்மனுவில் தங்களுடைய வீட்டின் வடபுறத்தில் அமைந்துள்ள வீட்டிற்கான மின்னிணைப்பு (3 Phase) தங்களுடைய தோட்டத்தின் வழியே செல்வதாகவும் அந்த வீட்டில் உள்ளவர்கள் மரங்கள் மின்னிணைப்பு கம்பியில் தொடுவதாக கூறி மரங்களை வெட்டுவதாகவும், அனுமதியின்றி தங்களது சொத்தின் மீது செல்லும் மின்னிணைப்பினை அகற்றி தருமாறு கோரியிருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இடம் கள ஆய்வு செய்யப்பட்டதில் மின் இணைப்பு எண்:192-011-2000-ஆனது 13-12-2019 அன்று திரு.டேவிட் ஷிபு, த/பெ.தங்கப்பன், என்பவரது பெயரில் மின்னிணைப்பு வழங்கப்பட்டதாகவும், அந்த மின்னிணைப்பிற்கு பொத்தியான் விளை SS 63KVA மின்மாற்றியின் F2/2 மின்கம்பத்திலிருந்து மின்சாரம் சென்று கொண்டிருக்கிறதாகவும், மின்னிணைப்பின் service wire திருமதி.G.S.S.லதா அவர்களின் தோட்டத்தின் மதில் சுவரில் இருந்து வடக்கு தெற்காக 2 அடி தூரமும் கிழக்கு மேற்காக 10 அடி தூரத்தில் சொத்தின் வழியாக செல்கிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 இந்த service wire செல்லும் பாதையை மாற்ற TNERC Distribution Code-27 (6)-ன் படி "*Where the intending consumer's premises has no frontage on a street and the supply line from licensee's mains has to go upon, over or under the adjoining premises of any other person (Whether or not the adjoining premises is owned jointly by the intending consumer and such other person), the*

*intending consumer shall arrange at his/her own expense for any necessary way leave, license or sanction before the supply is effected. Even when the frontage is available, but objections are raised for laying lines/cables/poles through a route proposed by the Licensee involving minimum cost and in accordance with the technical norms, to extend supply to the intending consumer, the intending consumer shall arrange at his/her own expense necessary way leave, licence or sanction before the supply is effected.* ***மற்றும்*** *TNERC Distribution Code-37****ன் படி***

*The cost of shifting a new service connection for which line is laid but service connection is yet to be effected shall be borne by the intending consumer. The intending consumer shall pay the above charges in advance in full. The shifting work will be taken up only after the payment is made*-ன் படி மாற்று பாதையை தெரிவித்து service wire-ஐ தாங்கி நிற்கும் supporting pipe அமைத்து உதவி பொறியாளர்/ வினியோகம்/ கருங்கல் அலுவலகத்தில் விண்ணப்பிந்து மதிப்பீட்டு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் வாரிய விதிப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கன்னியாகுமரி நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 16-09-2023 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் திரு.டேவிட்ஷிபு அவர்களின் மின்னிணைப்பின் சர்வீஸ் ஒயர் 13-12-2019 மின் இணைப்பு வழங்கும் போதே இந்த வழியாக தான் வழங்கப்பட்டுள்ளதாகவும், மின்னிணைப்பு வழங்கும் போது இது தொடர்பாக எந்தவித ஆட்சேபனையும் பெறப்படவில்லை எனவும், மீண்டும் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் 05-10-2023 அன்று சொத்தின் உரிமையாளரின் அனுமதியின்றி தனியார் சொத்துக்கள் வழியாக வீடுகளின் இணைப்பிற்கான கம்பிகளை கொண்டு செல்ல அனுமதிக்கும் அரசாணை நகல் கோரியிருந்ததாகவும், சொத்தின் உரிமையாளரின் அனுமதியின்றி தனியார் சொத்துக்கள் வழியாக வீடுகளின் இணைப்பிற்கான கம்பிகளை கொண்டு செல்ல அனுமதிக்கும் அரசாணை இல்லை என்ற தகவல் 20-11-2023 அன்று வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 எனவே மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மின் இணைப்பின் சர்வீஸ் ஒயர் பாதையை மாற்ற வேண்டுமாயின் மனுதாரர் மாற்றுப்பாதையை தெரிவித்து கருங்கல் பிரிவு அலுவலகத்தில் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து அதற்குரிய மதிப்பீடு

கட்டணம் செலுத்தும் பட்சத்தில் வாரிய விதிகளின் படி சர்வீஸ் ஒயர் மாற்றியமைக்க இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் வட்டம், இனயம்புத்தன்துறை கிராமத்தில் பரவை பகுதியில் (லூத்தரன் திருச்சபை அருகில்) அமைந்துள்ள கதவு எண். 18-84/2 வீட்டினை கடந்த 07-02-2023-இல் தனது மனைவி பெயரில் வாங்கி குடியிருந்து வந்ததாகவும், அதன் மின் இணைப்பு எண்.07-192-011-1746 எனவும் தெரிவித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளரின் வீட்டின் வடபுறத்தில் அமைந்துள்ள வீட்டிற்கான (3 Phase) இணைப்பின் சர்வீஸ் வயர் மேல்முறையீட்டாளரின் தோட்டத்தின் வழியே செல்கிறதாகவும், இவ்வாறு இணைப்பை பெறுவதற்காக அந்த வீட்டில் உள்ளவர்கள் அவருடைய சர்வீஸ் வயர் (service wire) தன்னுடைய வீட்டு மரங்களை தொடுவதாகக் கூறி தங்கள் வீட்டின் மரங்களை வெட்டியுள்ளதாகவும், எனவே, அனுமதியின்றி தன் சொத்தின் மீது செல்லும் அந்த வீட்டின் மின் இணைப்பின் சர்வீஸ் வயரை அகற்றித்தருமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில், மேல்முறையீட்டாளர் திருமதி.G.S.S.லதா என்பவர் 26.08.2023 அன்று நுகர்வோர் குறைதீர் மன்றம் வாயிலாக மனு அளித்து அம்மனுவில் மேல்முறையீட்டாளரின் வீட்டின் வடபுறத்தில் அமைந்துள்ள வீட்டிற்கான மின்னிணைப்பு (3 Phase) தங்களுடைய தோட்டத்திற்குள் ஏறிச் செல்வதாகவும் அந்த வீட்டில் உள்ளவர்கள் மரங்கள் மின்னிணைப்பு கம்பியில் தொடுவதாக கூறி தன்னுடைய மரங்களை வெட்டுவதாகவும், ஆகவே அனுமதியின்றி தங்களது சொத்தின் மீது அருகில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பிற்காக செல்லும் சர்வீஸ் வயரை அகற்றி தருமாறு கோரியிருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் அந்த இடம் கள ஆய்வு செய்யப்பட்டதில் மின் இணைப்பு எண்:192–011–2000–ஆனது 13.12.2019 அன்று திரு.டேவிட் ஷிபு, த/பெ.தங்கப்பன், என்பவரது பெயரில் மின்னிணைப்பு வழங்கப்பட்டதாகவும், அந்த மின்னிணைப்பிற்கு பொத்தியான் விளை SS 63KVA மின்மாற்றியின் F2/2 மின்கம்பத்திலிருந்து மின்சாரம் சென்று கொண்டிருக்கிறதாகவும், மின்னிணைப்பின் service wire திருமதி.G.S.S.லதா அவர்களின் தோட்டத்தின் மதில் சுவரில் இருந்து வடக்கு தெற்காக 2 அடி தூரமும் கிழக்கு மேற்காக 10 அடி தூரத்தில் சொத்தின் வழியாக செல்கிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேலும் திரு.டேவிட்ஷிபு அவர்களின் மின்னிணைப்பின் சர்வீஸ் ஒயர் 13–12–2019 மின் இணைப்பு வழங்கும் போதே இந்த வழியாக தான் வழங்கப்பட்டுள்ளதாகவும், மின்னிணைப்பு வழங்கும் போது இது தொடர்பாக எந்தவித ஆட்சேபனையும் பெறப்படவில்லை எனவும், எனவே மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மின் இணைப்பின் சர்வீஸ் ஒயர் மாற்ற வேண்டுமாயின் மனுதாரர் மாற்றுப்பாதையை தெரிவித்து கருங்கல் பிரிவு அலுவலகத்தில் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து அதற்குரிய மதிப்பீடு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் வாரிய விதிகளின் படி சர்வீஸ் ஒயர் மாற்றியமைக்க இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 இவ்வழக்கு சம்பந்தமாக மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்குள்ள அதிகார விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன். இந்திய மின்சார சட்டம், 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"51. Exercise in certain cases of powers of telegraph authority. –***

*Notwithstanding anything in Sections 12 to 16 (both inclusive) and Sections 18 and 19, the State Government may, by order in writing, for the placing of electric supply-lines, appliances and apparatus for the transmission of energy or for the purpose of telephonic or telegraphic communications necessaryfor the proper co-ordination of works, confer upon any public officer, licensee or any other person engaged in the*

*business of supplying energy to the public under this Act, subject to such conditions and restrictions (if any) as the State Government may think fit to impose, and to the provisions of the Indian Telegraph Act, 1885 (13 of 1885), any of the powers which the telegraph-authority possesses under that Act, with respect to the placing of telegraph lines and posts for the purposes of a telegraph established or maintained by the Government or to be so established or maintained."*

7.8 மேலும் இதுசம்பந்தமாக தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஆராய விரும்புகிறேன்.

***"Part III***
***Power to Place Telegraph Lines and Posts***
***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*

2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*

3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*

4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers. "*

7.9 மேற்கண்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–இன் பிரிவு 10–இன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விதிமுறைகளின்படி உரிமதாரர் மின்பயன் பெற உரிமை கோரும் நுகர்வோருக்கு மின்பாதை அமைக்க உரிமையுள்ளது என தெரியவருகிறது.

7.10 மேலும், இது சம்பந்தமாக மின்சார சட்டம், 2003–இன் 68 (1), (2)(a) மற்றும் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 29(6) மற்றும் 32(2) –ஐ ஆராய விரும்புகிறேன்.

***68. Overhead lines***

*(1) An overhead line shall, with prior approval of the Approprite Government, be installed or kept installed above ground in accordance with the provisions of sub–section (2).*

*(2) The provisions contained in sub–section (1) shall not apply–*

*(a) in relation to an electric line which has a nominal voltage not exceeding 11 kilovolts and is used or intended to be used for supplying to a single consumer"*

மேற்கூறிய மின்சார சட்டம் 68(2)(a)–இன்படி ஒரு தனிநபருக்கு மின்சாரம் வழங்கும் நேர்வில் 11 KV–க்குள் இருக்கும்பட்சத்தில் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமில்லை என தெரியவருகிறது. மேலும், மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு தாழ்வழுத்த மின்பாதையாகும்.

"***(29) Service Lines:***

*xxx*

*xxx*

*(6) The Consumer shall permit the Licensee to install all requisite equipments such as Transformers, switchgears, meters, etc., and to lay necessary cables or overhead lines and to provide connections thereto on the consumer's premises and shall also permit the Licensee to extend supply to other consumers through the cables, lines and equipments installed in the consumer's premises, provided that supply to the consumer in the opinion of the Engineer is not thereby unduly affected.*

***32. Licensee's Supply mains and equipments:***

*xxx*

*(2) The Licensee will have the right to use its supply lines and equipments provided under the conditions above and to lay cables under, across, over or through the consumer's premises for supply to other premises in the neighbourhood."*

7.11 மேற்கூறிய தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 29(6)–இன்படி நுகர்வோருக்குத் தரப்படும் மின்னிணைப்புக்குப் பேரளவு பாதிப்பு ஏதும் ஏற்படாதெனப் பொறியாளர் கருதும் போது நுகர்வோர் மின்மாற்றிகள், இணைப்பமைப்புகள், மின்னளவிகள் போன்ற அனைத்துத் தேவைப்படும் சாதனங்களை நிறுவவும் நுகர்வோரது இருப்பிடத்துக்கு இணைப்பு தரவும் அங்கிருந்து பிற நுகர்வோர்களின்

இருப்பிடங்களுக்கு இணைப்பு தரவும் தேவைப்படும் மின் வடம், மேனிலைத் தொடர் மற்றும் பிற இணைப்புகளை அமைக்கவும் உரிமதாரருக்கு இசைவு தர வேண்டும் என தெரிய வருகிறது.

7.12 மேற்கூறிய தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 32(2)–இன்படி உரிமதாரர், அருகில் உள்ள பிற இருப்பிடங்களுக்கு மின் வழங்கல் தர, மேற்குறிப்பிட்ட நிலைமைகளில் வைக்கப்பட்டுள்ள மின் தொடர்களையும், சாதனங்களையும் பயன்படுத்தவும் நுகர்வோர் இருப்பிடத்தின் ஊடாகவோ, குறுக்காகவோ, மேற்புறமாகவோ, நிலத்தடியாகவோ மின்வடங்களை அமைக்கவும் உரிமை உடையவராவார் என தெரிய வருகிறது.

7.13 மேலும், எதிர்மனுதாரரின் வாதுரையின் மூலம் மேல்முறையீட்டளாரின் வீட்டின் காலி இடத்தில் கடந்து செல்லும் காப்பிடப்பட்ட சர்வீஸ் வயர் (insulated cable) மூலம் உரிய இடைவெளியுடன் தரைதளத்திலிருந்து பாதுகாப்பான முறையில் செல்வதால் விபத்து ஏற்பட வாய்ப்பு இல்லை எனவும், அதே கம்பத்திலிருந்துதான் மேல்முறையீட்டாளருக்கு மின் விநியோகம் செய்யப்படுவதாகவும், சர்வீஸ் வயர் அமைக்கப்பட்ட காலகட்டத்தில் ஆட்சேபனை எதுவும் பெறப்படவில்லை என தெரியவருவதாலும் 2023–இல் மேல்முறையீட்டாளர் விலைக்கு வாங்கிய வீட்டின் ஓரமாக செல்லும் காப்பிடப்பட்ட சர்வீஸ் வயர் (insulated cable) 2019 காலகட்டத்திலிருந்தே திரு டேவிட் ஷிபு என்பவருக்கு மின் இணைப்பு வழங்கும் சர்வீஸ் வயராகவே இருப்பதனால் எதிர்மனுதாரரின் வாதம் ஏற்று கொள்ளப்பட்டு மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

7.14 இருப்பினும் மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்றி அமைக்க விரும்பும் பட்சத்தில் மின்பாதை இடமாற்றம் செய்ய ஆகும் மதிப்பீட்டு செலவு யாரை சாறும் என்பதை அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 6–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
> *(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே*

*கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

7.15 மேற்கூறிய விதியை ஆராயும்போது பாதுகாப்பாக நிறுவப்பட்ட நிலையிலிருந்து மற்றொரு பயனீட்டாளரின் சர்வீஸ் வயர் இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்பது தெரிய வருகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளரின் வீட்டின் காலி இடத்தில் ஓரமாக செல்லும் காப்பிடப்பட்ட (insulated wire) சர்வீஸ் வயரானது போதிய இடைவெளியுடன் பாதுகாப்பாக இருப்பதால் அவரது இடத்தின் வழியாக செல்லும் மற்றொரு பயனீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கும் சர்வீஸ் வயரை அகற்றித் தருமாறு வேண்டும் கோரிக்கை ஏற்புடையதாக இல்லையென்பதால் கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய ஆணையில் மாற்றம் எதுவும் தேவையில்லை என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 08/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி G.S.S. லதா, – By RPAD
18-84/2, பரவை, லூத்தரன்சபை திருசபை அருகில்,
இனையம்புத்தன்துறை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்-629193.

2. செயற்பொறியாளர்/ விநியோகம் / குழித்துறை,
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், மருதன்கோடு, மீனச்செல்,
குழித்துறை – 629 153.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பார்வதிபுரம், நாகர்கோவில் – 629 003.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.